Saidai Duraisamy's
Manidhanaeyam Free IAS Academy
(Run by Manidha Naeyam Charitable Trust)
28, 1st Main Road, CIT Nagar, Chennai - 35 (HO).
Mail Address: manidhanaeyam@gmail.com
Website: www.mntfreeias.com

| வினாத்தொகுப்பு எண்: | பதிவு எண்: |
|---|---|
| | |

## TNPSC - தொகுதி - IV & VAO தேர்வு - இணைய வழி தொடர் மாதிரி தேர்வு

## இந்த வினாப்புத்தகம்

## பகுதி-அ (பொதுத் தமிழ்) உள்ளடக்கியது

**கால அளவு: ஒரு மணி நேரம் முப்பது நிமிடம்** **மொத்த மதிப்பெண்கள்: 150**

வினாக்களுக்கு பதிலளிக்கும் முன் கீழ்கண்ட அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்

### முக்கிய அறிவுரைகள்

1. இந்த வினாத்தொகுப்பு, தேர்வு தொடங்குவதற்கு 15 நிமிடங்களுக்கு முன்னதாக வழங்கப்படும்.
2. இந்த வினாத்தொகுப்பு, 100 வினாக்களைக் கொண்டுள்ளது.
3. விடையளிக்கத் தொடங்கும் முன் இவ்வினாத்தொகுப்பில் எல்லா வினாக்களும் வரிசையாக இடம் பெற்றுள்ளனவா என்பதையும், இடையில் பெற்றுத்தாள்கள் எவையும் இல்லை என்பதையும் உறுதி செய்து கொள்ளவும். வினா தொகுப்பில் ஏதேனும் குறைபாடு இருப்பின், அதனை முதல் பத்து நிமிடங்களுக்குள் அறைக்கண்காணிப்பாளரிடம் தெரிவித்து, சரியாக உள்ள வேறொரு வினாத்தொகுப்பினை பெற்றுக்கொள்ள வேண்டும். தேர்வு தொடங்கிய பின்பு இது குறித்து முறையிட்டால் வினாத் தொகுப்பு மாற்றித் தரப்படமாட்டாது.
4. எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும். எல்லா வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.
5. உங்களுடைய பதிவு எண்ணை இந்தப் பக்கத்தின் வலது மேல் மூலையில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் நீங்கள் எழுத வேண்டும். வேறு எதையும் வினாத்தொகுப்பில் எழுதக்கூடாது.
6. விடைத்தாள் ஒன்று விடைகளை குறிப்பதற்கு அறைக்கண்காணிப்பாளரால். உங்களுக்கு வழங்கப்படும். <u>விடைகளை குறிப்பது உள்ளிட்ட அவசியம் பின்பற்றப்பட வேண்டிய அறிவுரைகள் விடைத்தாளிலும், தேர்வுக்கூட அனுமதிச் சீட்டிலும் வழங்கப்பட்டுள்ளன.</u>
7. உங்களுடைய வினாத்தொகுப்பு எண்ணை (Question Booklet Number) விடைத்தாளின் முதல் பக்கத்தில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் <u>கருமை நிற மையுடைய பந்துமுனைப் பேனாவினால்</u> குறித்துக்காட்டவேண்டும். வினாத்தொகுப்பு எண்ணை விடைத்தாளில் சரியாகக் குறித்துக் காட்டத் தவறினாலோ அல்லது குறிக்க தவறினாலோ உங்களுடைய விடைத்தாள் செல்லாததாக்கப்படும்.
8. ஒவ்வொரு வினாவும் (A), (B), (C), (D), (E) என ஐந்து பதில்களைக் (விடைகள்) கொண்டுள்ளது. நீங்கள் (A) அல்லது (B) அல்லது (C) அல்லது (D) இவைகளில் ஒரே ஒரு சரியான விடையைத் தேர்வு செய்து விடைத்தாளில் குறித்துக்காட்ட வேண்டும். ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடை இருப்பதாக நீங்கள் கருதினால், மிகச்சரியானது என நீங்கள் எதைக்கருதுகிறீர்களோ அந்த விடையை விடைத்தாளில் குறித்துக்காட்ட வேண்டும். உங்களுக்கு விடை தெரியவில்லை, எனில், நீங்கள் (E) என்பதை அவசியம் நிரப்பவேண்டும். எப்படியாயினும், ஒரு கேள்விக்கு ஒரே ஒரு விடைதான் தேர்ந்தெடுக்க வேண்டும். நீங்கள் ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட விடையளித்தால், அவற்றுள் ஒரு விடை சரியானதாக இருந்தாலும் அந்த விடை தவறானதாகவே கருதப்படும்.
9. நீங்கள் வினாத்தொகுப்பின் எந்தப்பக்கத்தையும் நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நேரத்தில் இந்த வினாத்தொகுப்பினையோ அல்லது விடைத்தாளையோ தேர்வு அறையை விட்டு வெளியில் எடுத்துச் செல்லக்கூடாது. தேர்வு முடிந்தபின் நீங்கள் உங்களுடைய விடைத்தாளை கண்காணிப்பாளரிடம் கொடுத்துவிடவேண்டும். இவ்வினாத் தொகுப்பினை தேர்வு முடிந்த பின்னர் மட்டுமே நீங்கள் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவீர்கள்.
10. குறிப்புகள் எழுதி பார்ப்பதற்கு வினா தொகுப்பின் கடைசி பக்கத்திற்கு முன் உள்ள பக்கங்களை பயன்படுத்திக் கொள்ளலாம். இதைத்தவிர, வினாத்தொகுப்பின் எந்த இடத்திலும் எந்தவித குறிப்புகளையும் எழுதக்கூடாது. இந்த அறிவுரை கண்டிப்பாக பின்பற்றப்படவேண்டும்.
11. நீங்கள் மேற்கண்ட அறிவுரைகளில் எவற்றையாவது பின்பற்ற தவறினால் தேர்வாணையம் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரிடும் என அறிவுறுத்தப்படுகிறது.

[Turn over]



Saidai Duraisamy's
Manidhanaeyam Free IAS Academy
(Run by Manidha Naeyam Charitable Trust)
28, 1st Main Road, CIT Nagar, Chennai - 35 (HO).
Mail Address: manidhanaeyam@gmail.com
Website: www.mntfreeias.com

| Question Booklet No: | Register Number: |
|---|---|
| | |

**TNPSC - Group - IV & VAO Exam - Online Test Series**

**This Booklet Contains**

**Part-A (Tamil Eligibility-Cum-Scoring Test)**

**Duration: One Hour Thirty Minutes** — **Total Marks : 150**

**Read the following instructions carefully before you begin to answer the questions**

## IMPORTANT INSTRUCTIONS

1. You will be supplied with this question booklet 15 minutes prior to the commencement of the examination.
2. This Question Booklet contains 100 questions.
3. Before answering the questions, you .shall check whether all the questions are printed serially and ensure that there are no blank pages in the question booklet. If any defect is noticed in the question booklet, it shall be reported to the invigilator within the first 10 minutes. and get it· replaced with a complete question booklet. If the defect is reported after the commencement of the examination, it will not be replaced.
4. Answer all the questions. All the questions carry equal marks.
5. You must write your Register Number in the space provided on the top right side of this page. Do not write anything else on the Question Booklet.
6. An answer sheet will be supplied to you separately by the room invigilator to shade the answers. Instructions regarding filling of answers etc., which are to be followed mandatorily, are provided in the answer sheet and in the mem"oranduin of admission (Hall Ticket).
7. You shall write and shade your question booklet number in the space provided on page one of the answer sheet with BLACK INK BALL POINT PEN. If you do not shade correctly or fail to shade the question booklet number, your answer sheet will be invalidated.
8. Each question comprises of five responses (answers) : i.e. (A), (B), (C), (D) and (E). You have to select ONLY ONE correct answer from (A) or (B) or (C) or (D) and shade the same in your answer sheet. If you feel that there are more than one 90rrect answer, shade the one which you consider the best. If you do not know the answer, you have to mandatorily shade (E). In any case, choose ONLY ONE answer for each question. If you shade more than one answer for a question, it will be treated as a wrong answer even if one of the given answers happens to be correct.
9. You should not remove or tear off any sheet from this Question Booklet.You are not allowed to take this Question Booklet and the Answer Sheet out of the Examination Room during the time of examination. After the examination. you must hand over your Answer Sheet to the Invigilator. You are allowed to take the Question Booklet with you only after the Examination is over.
10. You should not make any marking in the question booklet except in the sheets before the last page of the question booklet, which can be used for rough work. This should be strictly adhered to.
11. Failure to comply with any of the above instructions will render you liable for such action as the Commission may decide at their discretion.

[Turn over]

## பகுதி-அ - பொது தமிழ்
## Part-A- General Tamil
### 10 ஆம் வகுப்பு – பாடம் – 7, 8, 9

| | |
|---|---|
| வினாக்கள் : 1 - 100 | மொத்த மதிப்பெண்கள் : 150 |
| Questions : 1 - 100 | Total Marks : 150 |

1. இந்தியாவை விட்டு வெளியேறு என்ற தீர்மானத்தைப் பம்பாயில் கூடிய அகில இந்திய பேராயக்கட்சி ஒரு மனதாக நிறைவேற்றிய ஆண்டு
   (A) ஆகஸ்டு 8, 1942
   (B) ஆகஸ்டு 10, 1942
   (C) ஆகஸ்டு 20, 1942
   (D) ஆகஸ்டு 18, 1942

2. தெற்கெல்லைப் போராட்டத்தில் திருவிதாங்கூர் ஆட்சி நடத்திய துப்பாக்கிச் சூடு காரணமாக உயிர்நீத்த தமிழரசுக் கழகத் தோழர்கள் யார்?
   (A) தேவசகாயம், செல்லையா
   (B) மாணிக்கம், பொன்னையா
   (C) முத்து, பொன்னையா
   (D) செயப்பிரகாசம், மணிவர்மன்

3. கீழ்க்கண்ட கூற்றை கவனி
   கூற்று 1 - 1906ல் காந்தியடிகள் சத்தியாகிரகம் என்னும் அறப்போர் முறையைத் தென்னாப்பிரிக்காவில் தொடங்கினார்.
   கூற்று 2 – தலையை கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம் என்று முழக்கியவர் ம.பொ.சிவஞானம்.
   (A) கூற்று 1 மற்றும் 2 சரி
   (B) கூற்று 1 மற்றும் 2 தவறு
   (C) கூற்று 1 சரி, 2 தவறு
   (D) கூற்று 1 தவறு கூற்று 2 சரி

4. கீழ்க்கண்ட கூற்றை கவனி
   கூற்று 1 - இந்திரன் முதலாகத் திசைபாலகர் எட்டு பேர் உள்ளனர்.
   கூற்று 2 – திசைபாலகர் எட்டுப்பேரும் ஒருருவம் பெற்றதுபோல் ஆட்சி செலுத்தியவர்கள் சோழர்கள்
   (A) கூற்று 1 மற்றும் 2 சரி
   (B) கூற்று 1 மற்றும் 2 தவறு
   (C) கூற்று 1 சரி, 2 தவறு
   (D) கூற்று 1 தவறு கூற்று 2 சரி

5. இரண்டாம் இராசரா சோழனின் பட்டங்கள் எது?
   (A) கோப்பரகேசரி, திருபுவனச் சக்கரவர்த்தி
   (B) உலகின் சிங்கம்
   (C) அவனி சிம்மன்
   (D) மேற்கூறிய அனைத்தும்

6. பொருத்துக.

| | | |
|---|---|---|
| a. தூசு | - | 1. செல்வம் |
| b. துகிர் | - | 2. வெற்றிலை விற்போர் |
| c. வெறுக்கை | - | 3. விலை |
| d. நொடை | - | 4. பட்டு |
| e. பாசவர் | - | 5. பவளம் |

   (A) 4 5 1 3 2
   (B) 5 4 3 2 1
   (C) 1 2 3 4 5
   (D) 4 3 1 2 5

7. இலக்கணக்குறிப்பு தருக. வண்ணமும் சுண்ணமும், பயில்தொழில்
   (A) எண்ணும்மை, வினைத்தொகை
   (B) உம்மைத்தொகை, பண்புத்தொகை
   (C) பெயரெச்சம், எண்ணும்மை
   (D) பண்புத்தொகை, வினைத்தொகை

8. மருவூர்ப் பாக்கத்தில் மீன் விற்பவர் மற்றும் உப்பு விற்பவர் யார்?
   (A) உமணர், பரதவர்
   (B) பரதவர், உமணர்
   (C) வணிகர்
   (D) வலைச்சியர்

9. எம்.எஸ்.சுப்புலட்சுமி காந்தியடிகளைத் தில்லியில் சந்தித்த போது பாடிய பாடல் என்ன?
   (A) இரகுபதி ராகவ ராஜாராம்
   (B) கண்ணா கண்ணா
   (C) கீதம் கண்ணா வா
   (D) அனைத்தும்

10. நீலகரி படுகர் இன மக்களின் வாழ்வியல் மாற்றங்களைக் குறித்து ராஜம் கிருஷ்ணன் ----- என்னும் புதினத்தை எழுதினார்
   (A) குறிஞ்சித்தேன்
   (B) ரங்கோன் ராதா
   (C) சந்திரோதயம்
   (D) நீதிதேவன்

11. பெண் குழந்தைக் கொலைக்கான காரணங்களை ஆராய்ந்து ராஜம் கிருஷ்ணன் எழுதிய நூல் எது?
   (A) சேற்றில் மனிதர்கள்
   (B) மண்ணகத்துப் பூந்துகளிகள்
   (C) வேருக்கு நீர்
   (D) வீறுகள்

12. ஒரு பெண் நினைத்தால், முயன்றால், முன்னேறலாம், வெல்லலாம், நீங்களும் முயலுங்கள், முன்னேறுங்கள், வெல்லுங்கள் என்று கூறியவர் யார்?
   (A) மாயாதேவி
   (B) சின்னப்பிள்ளை
   (C) ஜெகந்நாதன்
   (D) சுப்புலட்சுமி

13. பாடுவதற்குத் தகுதியுடைய ஓர் ஆளுடையாளரின் கல்வி, வீரம், செல்வம், புகழ், கருணை முதலியவற்றை போற்றிப் பாடுவது எந்த திணை ஆகும்.
   (A) தும்பை
   (B) வெட்சி
   (C) பாடாண்
   (D) கரந்தை

14. பாடாண் திணை பிரித்து எழுதுக.
   (A) பாடு + ஆண் + தினை
   (B) பாடி + ஆண் + திணை
   (C) பாடு + இண் + திணை
   (D) பாடிய + ஆண் + திணை

15. மாலவன் குன்றம் போனாலென்ன வேலவன்
   குன்றமாவது எங்களுக்கு வேண்டும் - மாலவன் குன்றமும் வேலவன் குன்றமும் குறிப்பவை முறையே
   (A) திருப்பதியும் திருத்தணியும்
   (B) திருப்பதணியும் திருப்பதியும்
   (C) திருப்பதியும் திருச்செந்தூரும்
   (D) திருப்பரங்குன்றமும் பழனியும்

16. பொருத்துக.

a. Consulate — 1. ஆவணம்
b. Patent — 2. வணிகக்குழு
c. Document — 3. பாசனம்
d. Guild — 4. துணைத்தூதரகம்
e. Irrigation — 5. நிலப்பகுதி
f. Territory — 6. காப்புரிமை

(A) 5 6 4 3 2 1
(B) 4 6 1 2 3 5
(C) 4 2 1 6 3 5
(D) 1 2 3 4 5 6

17. தன்னை நாடி வந்த பரிசிலன் பொருள் பெறாமல் திரும்புவது தான் நாட்டை இழந்த துன்பத்தைவிடப் பெருந்துன்பம் எனக் குமணன் வருந்தியதாக கூறியவர் யார்?

(A) பெருந்தலைச் சாத்தனார்
(B) மூவாதியார்
(C) பரணர்
(D) மாறன் பொறையனார்

18. கீழ்க்கண்ட கூற்றை கவனி

கூற்று 1 – மதுரையில் இருந்த அவையம் துலாக்கோல் போல நடுநிலை மிக்கது என்று கூறும் நூல் மதுரைக்காஞ்சி

கூற்று 2 – தன்மை விட வலிமை குறைந்தாரோடு போர் செய்யக்கூடாது என்றவர் ஆவூர் மூலங்கிழார்

(A) கூற்று 1 மற்றும் 2 சரி
(B) கூற்று 1 மற்றும் 2 தவறு
(C) கூற்று 1 சரி, 2 தவறு
(D) கூற்று 1 தவறு கூற்று 2 சரி

19. பொருத்துக. (ஓரசைச்சீரர்)

a. நேர் - 1. பிறப்பு
b. நிரை – 2. காசு
c. நேர்பு – 3. நாள்
d. நிரைபு – 4. மலர்

(A) 3 2 4 1
(B) 3 4 2 1
(C) 4 3 2 1
(D) 1 2 3 4

20. வீட்டைத் துடைத்துச் சாயம் அடித்தல் - இவ்வடி குறிப்பிடுவது --------
(A) காலம் மாறுவதை
(B) வீட்டைத் துடைப்பதை
(C) இடையறாது அறப்பணி செய்தலை
(D) வண்ணம் பூசுவதை

21. கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும்வகை கிடைத்த
குளிர்தருவே தருநிழலே நிழல்கனித்த தனியே – என்ற பாடலின் ஆசிரியர் யார்?
(A) பாரதிதாசன்
(B) பாரதியார்
(C) கண்ணதாசன்
(D) வள்ளலார்

22. கீழ்க்கண்ட கூற்றை கவனி
கூற்று 1 – பா நான்கு வகைப்படும்
கூற்று 2 – ஓசை நான்கு வகைப்படும்
(A) கூற்று 1 மற்றும் 2 சரி
(B) கூற்று 1 மற்றும் 2 தவறு
(C) கூற்று 1 சரி, 2 தவறு
(D) கூற்று 1 தவறு கூற்று 2 சரி

23. ஜெயகாந்தன் பெற்ற விருதுகள் பொருத்துக.
a. குடியரசுத் தலைவர் விருது – 1. சில நேரங்களில் சில மனிதர்கள் (புதினம்)
b. சாகித்திய அகாடமி விருது – 2. இமயத்துக்கு அப்பால்
c. சோவியத் நாட்டு விருது – 3. உன்னைப்போல் ஒருவன் திரைப்படம்
(A) 3 1 2
(B) 1 2 3
(C) 3 2 1
(D) 1 3 2

24. நேர்கொண்ட ஆனால் வித்தியசமான பார்வை, நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள், இவைகள் ஜெயகாந்தன் என்ற செம்மாந்த தமிழனின் சிறப்பான அடையாளம் என்று கூறியவர் யார்
(A) கா. செல்லப்பன்
(B) கிருஷ்ணன்
(C) நாராயணகவி
(D) கண்ணதாசன்

25. ஜெயகாந்தன் எழுதிய சிறுகதை தொகுப்புகளில் பொருந்தாதது எது?
   (A) குருபீடம், யுகசந்தி
   (B) ஒருபிடி சோறு, உண்மை சுடும்
   (C) இனிப்பும் கரிப்பும், தேவன் வருவாரா
   (D) தண்ணீர்தாகம், காதலியின் கையெழுத்து

26. பொருத்துக.

| | | |
|---|---|---|
| a. சேக்கை | – | 1. கட்டி |
| b. யாக்கை | – | 2. பயனுள்ள |
| c. பிணித்து | – | 3. படுக்கை |
| d. வாய்ந்த | – | 4. உடல் |

   (A) 3 4 2 1
   (B) 4 3 2 1
   (C) 1 2 3 4
   (D) 3 2 1 4

27. பொருத்துக.

| | | |
|---|---|---|
| a. இளங்கூழ் | - | 1. அசைந்து |
| b. தயங்கி | - | 2. கிளை |
| c. காய்ந்தேன் | - | 3. இளம்பயிர் |
| d. கொம்பு | - | 4. வருந்தினேன் |

   (A) 4 3 2 1
   (B) 1 2 3 4
   (C) 3 1 4 2
   (D) 3 4 2 1

28. வீராமுனிவர் இயற்பெயர் என்ன?
   (A) கான்ஸ்டான் ஜோசப் பெஸ்கி
   (B) கிறித்துவக் கம்பர்
   (C) ஆளுடைப்பிள்ளை
   (D) மருள் நீக்கியர்

29. உவமணி கானம்கொல் என்று
   ஒலித்து அழவ போன்றே என்ற வரியினை கூறியவர் யார்?
   (A) வீராமமுனிவர்
   (B) ஜி.யு.போப்
   (C) கால்டுவெல்
   (D) உமறுப்புலவர்

30. பொருத்துக.

a. சேந்தன் - 1. வில்
b. தெவ் - 2. மேலே
c. சிலை - 3. சிவந்தன
d. மிசை - 4. பறவை
e. புள் - 5. பகைமை

(A) 3 4 5 2 1
(B) 1 2 3 4 5
(C) 3 5 1 2 4
(D) 5 4 3 2 1

31. எவ்வகைப்பட்ட பொருளாக இருந்தாலும், இயற்கையில் அமைந்த அதன் உண்மையான இயல்புத் தன்மையினைக் கேட்பவர்களின் மனம் மகிழுமாறு உரிய சொற்களை அமைத்துப் பாடுவது என்ன அணி

(A) உருவக அணி
(B) தன்மை நவிற்சி அணி
(C) உவமையணி
(D) வேற்றுமை அணி

32. எவ்வகைப் பொருளு மெய்வகை விளக்குஞ்
சொன்முறை தொடுப்பது தன்மையாகும் - என்ற பாடல் வரி இடம்பெற்ற நூல்

(A) சிலப்பதிகாரம்
(B) புறநானூறு
(C) புறப்பொருள் வெண்பாமாலை
(D) தண்டியலங்காரம்

33. பொருத்துக.

a. Humanism – 1. மனிதநேயம்
b. Cabinet – 2. அமைச்சரவை
c. Cultural Boundaries – 3. பண்பாட்டு எல்லை
d. Cultural Values – 4. பண்பாட்டு விழுமியங்கள்

(A) 4 3 2 1
(B) 1 2 3 4
(C) 1 4 3 2
(D) 3 4 2 1

34. நாகூர் ரூமியின் படைப்புகள் எந்த இதழ்களில் வெளியாகியுள்ளது?
   (A) மீட்சி, சுபமங்களா
   (B) புதிய பார்வை, குங்குமம்
   (C) கொல்லிப்பாவை, குமுதம்
   (D) மேற்கூறிய அனைத்தும்

35. கீழ்க்கண்ட கூற்றை கவனி
   கூற்று 1 : சிறுகதை மன்னன் என அழைக்கப்படுபவர் ஜெயகாந்தன்
   கூற்று 2 : ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள் என்ற புதினத்தை எழுதியவர்
   (A) கூற்று 1 மற்றும் 2 சரி
   (B) கூற்று 1 மற்றும் 2 தவறு
   (C) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு
   (D) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

36. கீழ்க்கண்ட கூற்றை கவனி
   கூற்று 1 : கிறித்துவின் வருகையை அறிவித்த முன்னோடி கருணையன்
   கூற்று 2 : வீரமாமுனிவருக்கு சந்தாசாகிப் இஸ்மத் சன்னியாசி என்ற பட்டத்தை வழங்கினார்
   (A) கூற்று 1 மற்றும் 2 சரி
   (B) கூற்று 1 மற்றும் 2 தவறு
   (C) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு
   (D) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

37. சுதந்திர இந்தியாவின் மகத்தான சாதனையும் சவாலுமாக ஜெயகாந்தன் கருதுவது?
   (A) அரசின் நலத்திட்டங்களைத் செயல்படுத்துதல்
   (B) பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காத்தல்
   (C) அறிவியல் முன்னேற்றம்
   (D) வெளிநாட்டு முதலீடுகள்

38. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
   பண்பும் பயனும் அது' என்ற குறளில் பயின்று வரும் அணி?
   (A) உருவக அணி
   (B) நிரல்நிறை அணி
   (C) உவமையணி
   (D) வேற்றுமை அணி

39. ‘மெய்யிற் பொடியும் விரித்த கருங்கழலும்
கையில் தனிச்சிலம்பும் கண்ணீரும் - வையைக்கோன்’ என்ற சிலப்பதிகாரம் பாடலில் பயின்று வந்துள்ள அணி யாது?
(A) தன்மை நவிற்சியணி
(B) நிரல்நிறை அணி
(C) உவமையணி
(D) வேற்றுமை அணி

40. கலையின் கணவனாகவும் சமுதாயத்தின் புதல்வனாகவும் இருந்து எழுதுகிறேன் இக்கூற்றிலிருந்து நாம் புரிந்து கொள்வது?
(A) தம் வாழ்க்கையில் பெற்ற விளைவுகளைக் கலையாக்கினார்
(B) சமூகப் பார்வையோடு கலைப்பணி புரியவே எழுதினார்
(C) அறத்தைக் கூறுவதற்காக எழுதினார்
(D) அழகியலுடன் இலக்கியம் படைத்தார்

41. செய்யுளில் ஓரிடத்தில் நின்ற ஒரு சொல் அச்செய்யுளின் பல இடங்களிலும் உள்ள சொற்களோடு சென்று பொருந்திப் பொருளை விளக்குவது ----- அணி ஆகும்.
(A) தீவக அணி
(B) உவமை அணி
(C) உருவக அணி
(D) பிறிது மொழிதல் அணி

42. தேன் + பா + அணி எனப்பிரிந்து ------ என்று பொருள் தரும்?
(A) தேன் போன்ற இனிய பாடல்களின் தொகுப்பு
(B) கனி போன்ற இலக்கிய தொகுப்பு
(C) மலர் போன்ற இலக்கண தொகுப்பு
(D) அனைத்தும்

43. ‘கைமுறை’ இலக்கணக்குறிப்பு தருக
(A) இரண்டாம் வேற்றுமை
(B) இரண்டாம் வேற்றுமைஉருபும் பயனும் உடன்தொக்க தொகை
(C) வினைத்தொகை
(D) மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை

44. 'எண்ணமும் எழுத்தும் உயர்ந்திருக்கும் - ஏழை கண்ணீரும் பாடலிலே கலந்திருக்கும்' என்ற பாடலின் ஜெயகாந்தன் யாரைப்பற்றி எழுதியுள்ளார்?
   (A) பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்
   (B) மோகனரங்கன்
   (C) பசுவய்யா
   (D) கண்ணதாசன்

45. பொருந்தா இணை எது.
   1. இமயத்துக்கு அப்பால் - சோவியத் நாட்டு விருது
   2. சித்திரப்பாவை – முதல் ஞானபீட விருது
   3. உன்னைப்போல் ஒருவன் - சாகித்திய அகாடமி
   (A) 1 மட்டும்
   (B) 2 மட்டும்
   (C) 3 மட்டும்
   (D) 2, 3 மட்டும்

46. பின்வரும் வாக்கியத்திற்கு தொடர்புடையவர் யார்.
   1. மலேசியாவில் இலக்கிய வட்டம் பயிற்சி அளித்தவர்
   2. அரசுப்பணியை உதறிவிட்டு முழுதாக எழுத்துப்பணி மேற்கொண்டவர்
   3. மென்மையான நகைச்சுவையும், சோக இழையும் ததும்பக் கதை எழுதுபவர்
   4. கரிசல் எழுத்தாளர்களில் ஒருவர்
   (A) கி.ரா
   (B) முகம்மது மீரான்
   (C) கு.அழகிரிசாமி
   (D) பூமணி

47. ராஜம் கிருஷ்ணனின் நூல் பற்றிய கூற்றை ஆராய்க.
   1. மீனவர்களின் சிக்கல் - கரிப்பு மணிகள்
   2. தொழிலாளர் உழைப்பு சுரண்டல் - வேருக்கு நீர்
   3. உப்பளத் தொழிலாளர்கள் - சேற்றில் மனிதர்கள்
   சரியான இணை எது.
   (A) 2 மட்டும்
   (B) 2 மட்டும்
   (C) 3 மட்டும்
   (D) மேற்கண்ட அனைத்தும்

48. வீரமாமுனிவர் பற்றிய சரியான கூற்று எது.
   1. தமிழ் அகராதியின் தந்தை
   2. குட்டித் தொல்காப்பியத்தை இயற்றியவர்
   3. மதுரைத் தமிழ்ச்சங்கம் - தைரியநாதர் என்ற பட்டம் வழங்கியது.
   4. 2 மாதங்களில் உருதுமொழி கற்றவர்

(A) 1, 4 சரி
(B) 1, 2, 4 சரி
(C) 1, 3, 4 சரி
(D) அனைத்தும் சரி

49. ம.பொ.சி பற்றிய கூற்றுகளில் தவறானது.
   1. விடுதலை போராட்ட வீரர்
   2. சட்டமேலவைத் தலைவர் மற்றும் உறுப்பினர்
   3. சிறப்புப்பெயர் - புத்தகப்பித்தன்
   4. வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு சாகித்திய அகாதமி விருது.

(A) 3 மட்டும் தவறு
(B) 2,3,4 தவறு
(C) 3,4 தவறு
(D) எதுவுமில்லை

50. மெய்கீர்த்தி பற்றிய கூற்று ஆராய்க.

கூற்று 1 – திரைபாலகர் ஏழுபேரும் ஒருசேர பெற்றது போல சோழன் ஆட்சி செய்தான்

கூற்று 2 – மாங்காய்கள் மட்டுமே பறிக்கப்படுகின்றன மக்கள் உரிமைகள் அல்ல

(A) கூற்று 1 தவறு
(B) கூற்று 2 தவறு
(C) கூற்று 1, 2 தவறு
(D) கூற்று 1, 2 சரி

51. பொருத்துக.

| | | |
|---|---|---|
| a. மனம் | - | 1. கதிர் |
| b. சொல் | - | 2. நீர் |
| c. சிந்தனை | - | 3. களை |
| d. மடமை | - | 4. விதை |
| e. தத்துவம் | - | 5. உழவன் |
| f. அறம் | - | 6. வயல் |

(A) 1 2 3 4 5 6
(B) 2 3 4 5 1 6
(C) 5 6 4 3 2 1
(D) 6 5 4 3 2 1

52. கீழே கொடுக்கப்பட்டுள்ள தொடர் மற்றும் அதை இயற்றியவருடன் தொடர்புடைய சரியான விடை.

1. "நதியின் பிழையன்று நறும்புனலின்மை அன்றே" — என்ற பாடல் வரியை கவியரசு இயற்றினார்.
2. 'நதிவெள்ளம் காய்ந்து விட்டால் நதிசெய்த குற்றம் இல்லை' — என்ற பாடல் வரியை கவிச்சக்கரவர்த்தி இயற்றினார்.
3. ஊர்செழிக்கத் தொழில்செய்யும் உழைப்பாளிகள் - கவி.கா.மு.ஷெரீப்

(A) 1 சரி

(B) 2 சரி

(C) 3 சரி

(D) மேற்கண்ட அனைத்தும்

53. சேரர்களின் பட்டப்பெயர்களில் கொல்லி வெற்பன் மலையமான் போன்றவை குறிப்பிடத்தக்கவை கொல்லி மலையை வென்றவன் கொல்லி வெற்பன் எனவும் பிற மலைப்பகுதியை வென்றவர்கள் மலையமான் எனவும் பெயர் சூட்டிக்கொண்டனர்.

- மேலே கொடுக்கப்பட்டுள்ளவையில் வெற்பன் என்பதின் பொருள் என்ன?

(A) மன்னன்

(B) அரசன்

(C) மலை

(D) பட்டப்பெயர்கள்

54. 'மெய்யிற் பொடியும் விரித்த கருங்குழலும்

கையில் தனிச்சிலம்பும் கண்ணீரும் - வையைக் கோன்'

மேற்கண்ட பாடல் வரியில் குறிக்கப்படுபவர்கள் யார், யார்?

(A) கண்ணகி, சோழ மன்னன்

(B) கண்ணகி, பாண்டிய மன்னன்

(C) கண்ணகி, சேர மன்னன்

(D) கண்ணகி, கூன் பாண்டியன்

55. கீழ்க்கண்ட கூற்றை கவனி

கூற்று 1: கருத்தாழமும் வாசகச் சுவைப்பும் கலந்து இலக்கியங்கள் படைத்தவர்.

கூற்று 2: மனிதம் தோய்ந்த எழுத்தாளுமை மிக்கவர்.

கூற்று 3: சமூக அமைப்பின் முரண்பாடுகளை எழுத்திலே அப்பட்டமாகக் காட்டியவர்.

கூற்று 4: விழிகளை இழக்க நேரிட்டால் கூட தாய்த்தமிழினை இழந்துவிடகூடாது என்று எண்ணியவர்.

மேற்கண்ட கூற்றுகளை கூறியவர் மற்றும் அவருடன் தொடர்பில்லாத கூற்று எது.

(A) இளங்குமரனார், கூற்று 1

(B) தேவநேயப்பாவணர், கூற்று 2

(C) ஜெயகாந்தன், கூற்று 4

(D) அண்ணா, கூற்று 4

56. ‘எண்ணமும் எழுத்தும் உயர்ந்திருக்கும்’ - என்ற வரி யார் யாரைப் பற்றி பாடியது.

(A) பகுத்தறிவு கவிஞர், மக்கள் கவிஞரை

(B) ஜெயகாந்தன், பகுத்தறிவு கவிஞரை

(C) மக்கள் கவிஞர், ஜெயகாந்தனை

(D) ஜெயகாந்தன், மக்கள் கவிஞரை

57. ‘பண்ணொடு சந்தமும் பாய்ந்து வரும் - பழைய
மண்ணின் வாடையும் சேர்ந்து வரும்.

மேற்கண்ட பாடல் வரியில் அடிக்கோடிடப்பட்டதின் சரியான பொருள் என்ன?

(A) பாடல்

(B) மலை

(C) வேதம்

(D) இசை

58. சரியான பாடல் வரியைத் தேர்க.

(A) ஆக்கல் அலித்தல் அழித்தல் இம்மூன்றும் அவறும் யானுமே அறிந்தவை அறிக.

(B) ஆக்கல் அளித்தல் அலித்தல் இம்மூன்றும் அவறும் யானுமே அறிந்தவை அறிக.

(C) ஆக்கல் அளித்தல் அழித்தல் இம்மூன்றும் அவறும் யானுமே அறிந்தவை அறிக.

(D) ஆக்கல் அழித்தல் அளித்தல் இம்மூன்றும் அவறும் யானுமே அறிந்தவை அறிக.

59. செம்மை சான்ற காவிதி மாக்கள் என்று யார் யாரை குறிப்பிடுகின்றார்.
(A) அரசனை, மாங்குடி மருதனார்
(B) அரசனை ஊன் பொதி பசுங்குடையார்
(C) அமைச்சரை, மாங்குடி மருதனார்
(D) அமைச்சரை, ஊன் பொதி பசுங்குடையார்

60. தவறான இணையைத் தேர்க.
1. அறநெறி முதற்றே அரசின் கொற்றம் - புறநானூறு
2. இம்மை செய்தது மறுமைக்கும் ஆம்எனும் - புறநானூறு
3. ஈயாமை இழிவு, இரப்போர்க்கு ஈயாது வாழ்தலைவிட உயிரை விட்டுவிடுதல் மேலானது – கலித்தொகை
4. தான் பெற்றதைப் பிறருக்கு வழங்கும் பெருஞ்சித்திரனாரின் பேருள்ளம் - புறநானூறு
(A) 1 மட்டும்
(B) 2 மட்டும்
(C) 3 மற்றும் 4
(D) மேற்கண்ட எதுவுமில்லை

61. பொருத்துக.
a. வெண்பா வகை - 1. 6
b. ஆசிரியப்பா வகை - 2. 4
c. யாப்பு உறுப்புகள் - 3. 5
(A) 1 2 3
(B) 2 3 1
(C) 3 2 1
(D) 2 1 3

62. பின்வரும் பத்தியைப் படித்து பின் கேட்கப்பட்ட கேள்விக்கு விடையளிக்கவும்.
பேரரசுனது மெய்ப் புகழை எடுத்துக்கூறுவது மெய்க்கீர்த்தி. பொதுவாக இது சோழ மன்னருடைய சாசகனங்களின் தொடக்கத்தில் அரசனுடைய இத்தனையாவது ஆட்சியாண்டு என்று கூறுமிடத்து அமைக்கப்பெறும். சிறப்பாக அவனுடைய போர் வெற்றிகளையும் வரலாற்றையும் முறையாகக் கூறி, அவன் தன் தேவியோடு வீற்றிருந்த நீடு வாழ்க எனக் கூறி, பிறகே சாசனம் எழுந்த நிகழ்ச்சியைக் குறிப்பிடும்.
சோழ மன்னர் பரம்பரையில் மெய்க்கீர்த்தியோடு சாசனங்களைப் பொறிக்கும் வழக்கம் நெடுநாள் இருந்ததில்லை. முதல் இராசராசனுடைய எட்டாம் ஆண்டில்தான் மெய்க்கீர்த்தி காணப்படுகிறது. இதன்கண் வமிச பாரம்பரியம் விதந்து ஓதப்படவில்லை. ஏனைய பகுதிகள் உள்ளன. எனினும் இது மிகவும் சுருக்கமாகவே உள்ளது. இன்னும் பின்வந்த மெய்க்கீர்த்திகளின் வமிச பரம்பரையை மிகவும் விரித்துக் கூறியுள்ளன.
முதல் இராசராசனுடைய எந்த நூற்றாண்டில் மெய்க்கீர்த்தி காணப்படுகிறது.
(A) 5 ம் நூ
(B) 6 ம் நூ
(C) 7 ம் நூ
(D) 8 ம் நூ

63. பொருத்துக.

a. வெட்சித் திணை - 1. குறுமரம்
b. கரந்தைத் திணை - 2. முடக்கொற்றான்
c. உழிஞைத் திணை - 3. கொட்டைக் கரந்தை
d. காஞ்சித் திணை - 4. இட்லிப்பூ

(A) 1 2 3 4
(B) 4 3 2 1
(C) 1 3 2 4
(D) 2 3 5 1

64. எம். எஸ். சுப்புலட்சுமி பற்றிய கூற்றுகளில் தவறானது?

1. 1974ல் மகசேசே விருது பெற்றார்
2. 1954 ல் தாமரையணி விருது
3. இசைப்பேரரசி என்று காந்தி பாராட்டினார்.
4. காந்தியடிகளைத் தில்லியில் சந்தித்தபோது இரகுபதி இராகவ இராஜாராம் என்ற பாடலைப் பாடினார்.

(A) 1 மட்டும்
(B) 2 மட்டும்
(C) 3 மட்டும்
(D) 4 மட்டும்

65. கூற்றினை ஆராய்க. (ம.பொ.சி)

1. சிலம்பு செல்வர் எனப் போற்றப்படுபவர்
2. 1972 – 1978 சட்டமேலவைத் தலைவர்
3. 1952 – 1956 சட்டமன்ற மேலவை உறுப்பினர்
4. திருத்தணி, சென்னை போன்ற இடங்களில் சிலை அமைப்பட்டுள்ளது.

(A) 1, 2 சரி 3, 4 தவறு
(B) 1, 2, 3, 4 சரி
(C) 1, 3 சரி 2, 4 தவறு
(D) 1, 2, 4 சரி 3 தவறு

66. பொருத்துக.

a. செப்பலோசை - 1. ஒருவர் பேசுதல் போன்ற சொற்பொழிவாற்றுவது போன்ற ஓசை
b. அகவலோசை - 2. இருவர் உரையாடுவது போன்ற ஓசை
c. துள்ளலோசை - 3. சீர்தோறுந் துள்ளாது தூங்கிவரும் ஓசை
d. தூங்கலோசை - 4. கன்று துள்ளினாற் போலச் சீர்தோறும் துள்ளி வரும் ஓசை

(A) 1 3 2 4
(B) 1 2 3 4
(C) 2 1 4 3
(D) 2 3 1 4

67. கூற்றை ஆய்க. (பெருங்குணத்து காதலாள் நடந்த பெருவழி)

1. தென்னவன் சிறுமலையின் இடப்பக்கம் வழியாகச் சென்றால் மதுரையை அடையலாம்.
2. சிறுமலையின் வலப்பக்க வழியாகச் சென்றால் திருமால்குன்றம் (அழகர்மலை) வழியாக மதுரை செல்லலாம்.
3. இவ்விரண்டுக்கும் இடைப்பட்ட வழியில் சோலைகள் மிகுந்த ஊர்களும் காடுகளும் உள்ளன. அவ்வழியாக சென்றால் மூன்று வழிகளும் சந்திக்கும் மதுரைப் பெருவழியை அடைந்து மதுரை செல்லலாம்.
4. கோவலனையும், கண்ணகியையும் கவுந்தியடிகள் இடைப்பட்ட வழியிலே அழைத்துச் சென்றார்.

(A) 1, 2 சரி 3, 4 தவறு
(B) 1, 2, 3 சரி 4 தவறு
(C) 1, 3 சரி 2, 4 தவறு
(D) 1, 2 தவறு 3, 4 சரி

68. சரியற்றதைத் தேர்ந்தெடு.

(A) குற்றங்களை அறத்தின் அடிப்படையில் ஆராய்ந்து தண்டனை வழங்க வேண்டும் என்கிறார் - ஊன் பொதிப் பசுங்குடையார்
(B) நன்றும் தீதும் ஆய்தலும் அன்பும் அறனும் காத்தும் அமைச்சர் கடமை என்கிறது. – மதுரைக்காஞ்சி
(C) அறம் கூறு அவையம் பற்றி அறம் அறக் கண்ட நெறிமான் அவையம் என்கிறது புறநானூறு
(D) செம்மை சான்ற காவிதி மாக்கள் என்று அமைச்சர்களை ஆவூர் மூலங்கிழார் கூறுகிறார்.

69. தேம்பாவணி பற்றிய கருத்துகளுள் தவறானது.

1. 16ம் நூற்றாண்டின் இறுதியில் படைக்கப்பட்டது
2. இக்காப்பியம் 3 காண்டங்களையும் 36 படலங்களையும் உள்ளடக்கிய 3165 பாடல்களை கொண்டது.
3. கிறித்துவின் வளர்ப்பு தந்தையாகிய சூசையப்பர் (வளனை) பாட்டுடை தலைவனாக கொண்ட நூல்

(A) 1, 2
(B) 1, 2, 3
(C) 3 மட்டும் சரி
(D) 2 மட்டும் சரி

70. போருழந் தெடுத்த ஆரெயில் நெடுங்கொடி வாரல் என்பனபோல் மறித்துக்கை காட்ட – என்ற பாடலில் இடம்பெற்றுள் அணி எது.

(A) தற்குறிப்பேற்ற அணி
(B) வேற்றுமை அணி
(C) உருவக அணி
(D) பிறிது மொழிதல் அணி

71. பொருத்துக.

a. புழை - 1. துளை
b. கான் - 2. காடு
c. தேம்ப - 3. வாட
d. அசும்பு - 4. நிலம்

(A) 1 3 2 4
(B) 1 2 3 4
(C) 4 3 2 1
(D) 2 3 4 1

72. பொருத்துக.

a. உய்முறை - 1. மலர்கள்
b. ஓர்ந்து - 2. மாலை
c. கடிந்து - 3. மணமலர்
d. உவமணி - 4. விலக்கி
e. படலை - 5. நினைத்து
f. துணர் - 6. வாழும் வழி

(A) 6 5 4 3 2 1
(B) 1 2 3 4 5 6
(C) 5 4 6 2 3 1
(D) 5 6 3 4 1 2

73. இலக்கணக்குறிப்பு தருக. காக்கென்று

(A) பண்புத்தொகை
(B) தொகுத்தல் விகாரம்
(C) வினைத்தொகை
(D) வேற்றுமைத்தொகை

74. அது ஒரு தவம், தீங்கள் கதை என்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்களே அது காலத்தின், ஒரு வாழ்க்கையின் சாசனம் என்று ஜெயகாந்தன் எந்த புதினத்தின் முன்னுரையில் எழுதியிருக்கிறார்.
(A) சுந்திரகாண்டம்
(B) பாரீசுக்குப்போ
(C) கங்கை எங்கே
(D) ஒரு வீடு ஒரு உலகம்

75. பொருத்தமான பொருளைத் தெரிவு செய்க
மலை முகட்டில் மேகம் ------ அதைப் பார்க்கும் மனங்கள் செல்லத் -----
(A) தங்கும் - தயங்கும்
(B) தவழும் - படியும்
(C) கூடும் - தயங்கும்
(D) சேரும் - கூடும்

76. “ஆடையிலே எனைமணந்த மணவாளா பொதுவில்
ஆடுகின்ற அரசே என் அலங்கல் அணிந் தருளே” – என்ற பாடல் இயற்றியவர் யார்.
(A) அபி
(B) உதயா
(C) மு. வரதராசனார்
(D) பாரத்

77. கீழ்க்கண்ட கூற்றை கவனி
கூற்று 1 – வெண்பாவில் இயற்சீர், வெண்சீர் மட்டுமே பயின்று வரும்
கூற்று 2 – வஞ்சிப்பாவிற்குரிய ஓசை துள்ளல் ஓசை ஆகும்.
(A) கூற்று 1, 2 சரி
(B) கூற்று 1, 2 தவறு
(C) கூற்று 1 சரி 2 தவறு
(D) கூற்று 1 தவறு 2 சரி

78. பொருத்துக. கலைச்சொல்
a. Belief – 1. மறுமலர்ச்சி
b. Renaissance – 2. மீட்டுருவாக்கம்
c. Philosopher – 3. நம்பிக்கை
d. Revivalism – 4. மெய்யியலாளர்
(A) 1 2 3 4
(B) 3 1 4 2
(C) 3 4 2 1
(D) 4 3 2 1

79. காலக்கணிதம் கவிதையில் இடம்பெற்ற தொடர் ------
   (A) இகழந்தால் என்மனம் இறந்துவிடாது
   (B) என்மனம் இகழ்ந்தால் இறந்துவிடாது
   (C) இகழந்தால் இறந்துவிடாது என்மனம்
   (D) என்மனம் இறந்துவிடாது இகழந்தால்

80. மேன்மை தரும் அறம் என்பது ----
   (A) கைம்மாறு கருதாமல் அறம் செய்வது
   (B) மறுபிறப்பியல் பயன் பெறலாம் என்ற நோக்கில் அறம் செய்வது
   (C) புகழ் கருதி அறம் செய்வது
   (D) பதிலுதவி பெறுவதற்காக அறம் செய்வது

81. பொருத்துக.
   a. நேர் நேர் நிரை – 1. கூவிளங்கனி
   b. நிரை நேர் நிரை – 2. கருவிளங்கனி
   c. நிரை நிரை நிரை – 3. புளிமாங்கனி
   d. நேர் நிரை நிரை – 4. தேமாங்கனி
   (A) 3 4 2 1
   (B) 4 3 1 2
   (C) 4 3 2 1
   (D) 1 2 3 4

82. கூர்வேல் குவைஇய மொய்ம்பின்
   தேர்வன் பாரிதண் பறம்பு நாடே – என்ற பாடல்வரி இடம்பெற்ற நூல் எது.
   (A) புறநானூறு
   (B) அகநானூறு
   (C) நற்றிணை
   (D) கலித்தொகை

83. தமிழக அரசின் அரசவை கவிஞர் அல்லது ஆஸ்தான் கவிஞராகவும் சிறப்பிக்கப்பட்டு இருந்தவர் யார்.
   (A) கண்ணதாசன்
   (B) கிருஷ்ணன்
   (C) நாராயணகவி
   (D) சுரதா

84. கீழ்க்கண்ட கூற்றை கவனி

கூற்று 1 – பேகன் மறுமை நோக்கிக் கொடுக்காதவன் என்றுக் கூறியவர் பரணர்

கூற்று 2 – எல்லாவற்றையும் கொடுப்பவன் என்று மலையமான் திருமுடிக்காரியை பாராட்டியவர் கபிலர்

(A) கூற்று 1 2 சரி
(B) கூற்று 1 2 தவறு
(C) கூற்று 1 சரி 2 தவறு
(D) கூற்று 1 தவறு 2 சரி

85. "இரவலர் வராவிட்டாலும் அவர்களைத் தேடி வரவழைத்தல்" யாருடை இயல்பு என்று நச்செள்ளையார் கூறுகிறார்.

(A) பெருஞ்சாத்தன்
(B) ஆடுகோட்பாட்டுச் சேரலாதன்
(C) பேகன்
(D) பாரி

86. "இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம் எனும் அறவிலை
வணிகன் ஆஅய் அல்லன்" என்ற புறநானூறு பாடலை இயற்றியவர் யார்.

(A) ஏணிச்சேரி முடமோசியார்
(B) கண்ணன் கூத்தனார்
(C) முள்ளியார்
(D) புல்லங்காடனார்

87. தமிழாசான் மங்கலங்கிழார் மற்றும் தமிழரசுக் கழகம் இணைந்து எங்கெங்கு தமிழர் மாநாட்டை நடத்தியது.

(A) சென்னை, திருத்தணி
(B) மதுரை, சென்னை
(C) சென்னை, விழுப்புரம்
(D) மதுரை, தஞ்சை

88. கேரள மாநிலம் உருவானபோது தமிழர்கள் மிகுதியாக வாழக்கூடிய எந்த பகுதிகள் தமிழகத்தோடு சேர வேண்டும் என்று தமிழரசுக் கழகம் போராட்டத்தைத் தொடங்கியது.

(A) தேவிகுளம், பீர்மேடு
(B) தோவாளை, அகத்தீசுவரம், கல்குளம்
(C) விளவங்கோடு, நாகர்கோவில்
(D) அனைத்தும் சரி

89. புறநானூறு மற்றும் சிலப்பதிகாரமானது தமிழகத்தின் வடக்கெல்லை ----- என்னும் தெற்கெல்லை ---- என்றும் குறிப்பிடுகிறது.
(A) அகத்தியமலை, தென்முனை
(B) வேங்கடமலை, குமரி முனை
(C) அமராவதி, குமரி முனை
(D) எதுவுமில்லை

90. கு.ப.ராஜகோபாலன் எந்தெந்த இதழ்களில் ஆசிரியராகப் பணியாற்றினார்.
(A) தமிழ்நாடு, பாரதமணி
(B) பாரததேவி
(C) கிராம ஊழியன்
(D) மேற்கூறிய அனைத்தும்

91. பொருத்துக.

| | | |
|---|---|---|
| a. | ஒசுநர் | - 1. சிற்பி |
| b. | மண்ணுள் வினைஞர் | - 2. எண்ணெய் விற்போர் |
| c. | மண்ணீட்டாளர் | - 3. ஓவியர் |
| d. | கிழி | - 4. துணி |

(A) 1 2 3 4
(B) 3 4 1 2
(C) 4 3 2 1
(D) 2 3 1 4

92. ஐம்பெருங்காப்பிய முறைவைப்பு பற்றிய சிந்தா மணியாம் சிலப்பதிகா ரம் படைத்தான் - எனத் தொடங்கும் பாடல் இடம்பெற்ற நூல் எது.
(A) மணிமேகலை
(B) திருவருட்பா
(C) குறவஞ்சி
(D) திருத்தணிகையுலா

93. மதுரையில் கணவனை இழந்த கண்ணகி, மதுரையிலிருந்து வைகையின் தென்கரை வழியாக (நெடுவேள் குன்றம் - சுருளிமலை) சென்ற எந்த இடத்தை அடைந்தாள்
(A) வேங்கைக்கானல்
(B) திருமால் குன்றம்
(C) பாவைக்கானல்
(D) கொடும்பாளுரு

94. சிலப்பதிகாரத்தில் உள்ள இந்திரவிழா ஊரெடுத்த காதை (மருவூர் பாக்கம்) எந்தக் காண்டத்தில் அமைந்துள்ளது.
   (A) மதுரைக்காண்டம்
   (B) வஞ்சிக்காண்டம்
   (C) புகார்க்காண்டம்
   (D) பாலக்காண்டம்

95. இரட்டைக் காப்பியம் என்பது எது.
   (A) சிலப்பதிகாரம், வளையாபதி
   (B) சிலப்பதிகாரம், மணிமேகலை
   (C) மணிமேகலை, வளையாபதி
   (D) வளையாபதி, குண்டலகேசி

96. கீழ்க்கண்ட கூற்றை கவனி
   கூற்று 1 - மூவேந்தர் பற்றிய செய்திகளைக் கூறும் காப்பியம் சிலப்பதிகாரம்
   கூற்று 2 – பாவின வளர்ச்சிக்கு வித்திட்ட காப்பியம் சிவகசிந்தாமணி
   (A) கூற்று 1 2 சரி
   (B) கூற்று 1 2 தவறு
   (C) கூற்று 1 சரி 2 தவறு
   (D) கூற்று 1 தவறு 2 சரி

97. குறையொன்று மில்லை மறைமூர்த்திக் கண்ணா
   குறையொன்று மில்லை கோவிந்தா – என்ற பாடலை பாடியவர் யார்.
   (A) பால சரஸ்வதி
   (B) எம்.எஸ்.சுப்புலட்சுமி
   (C) ராஜம் கிருஷ்ணன்
   (D) சின்னம்பிள்ளை

98. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நாட்டியம் ஆடுவது கீழ்மையானது என்ற எண்ணம் பரவலாக இருந்து வந்த நிலையை மாற்றியவர் யார்.
   (A) எம்.எஸ்.சுப்புலட்சுமி
   (B) ராஜம் கிருஷ்ணன்
   (C) சின்னப்பிள்ளை
   (D) பால சரஸ்வதி

99. உழுபவருக்கே நில உரிமை இயக்கம் தொடங்கி வேளாண்மை இல்லாத காலத்திலும் உழவருக்கு வேறு பணிகள் மூலம் வருமானம் வர ஏற்பாடு செய்தவர் யார்.

(A) எம்.எஸ்.சுப்புலட்சுமி

(B) கிருஷ்ணம்மாள் ஜெகநாதன்

(C) அன்பரசி

(D) மோகனா

100. கீழ்க்கண்ட கூற்றை கவனி

கூற்று 1 – மகசேசே விருது பெற்ற முதல் இசைக் கலைஞர் எம்.எஸ். சுப்புலட்சுமி

கூற்று 2 – எம்.எஸ்.சுப்புலட்சி இந்தியாவின் மிக உயரிய விருதான இந்தியமாமணி விருது பெற்றுள்ளார்.

(A) கூற்று 1, 2 சரி

(B) கூற்று 1, 2 தவறு

(C) கூற்று 1 சரி 2 தவறு

(D) கூற்று 1 தவறு 2 சரி

******